

# புனித லூர்து மாதா தேவாலயம்


45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org




**திருத்தந்தையின் கருத்து : தேசிய தலைவர்கள்: தேசிய தலைவர்கள் அநேக அப்பாவி மக்களை பாதிப்புள்ளாக்கும் ஆயுத வர்த்தகத்தை முடிவுக்கு கொண்டு வர உறுதியுடன் தங்களை அர்ப்பணிக்க வேண்டுமென்று**

**ஜூன் மாத கரு : ஒன்றிணைக்கும் ஆவி**

## பங்கில் திருப்பலிகள்

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| ஜூன் 11 ஞா | காலை 7.00<br>காலை 9.00<br>மாலை 5.30 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ, ம)<br>நவநாள்/ திருப்பலி (த) | தமத்திருத்துவ ஞாயிறு<br>தமத்திருத்துவ ஞாயிறு<br>புனித பிரான்சிஸ் அசிசி சிற்றாலயம், தாசேக் |
| ஜூன் 12 திங் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | பொதுக்கால வாரநாள் |
| ஜூன் 13 செவ் | மாலை 6.30 | திருப்பலி (ஆ) | புனித பதுவை அந்தோணியார் |
| ஜூன் 15 வியா | காலை 6.30 | திருப்பலி (த) | பொதுக்கால வாரநாள் |
| ஜூன் 16 வெள் | மாலை 6.30 | திருப்பலி (த) | பொதுக்கால வாரநாள் |
| ஜூன் 17 சனி | காலை 6.30 | திருப்பலி (ஆ) | பொதுக்கால வாரநாள் |
| ஜூன் 18 ஞா | காலை 7.00<br>காலை 9.00<br>மாலை 6.00 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ, ம)<br>திருப்பலி (த) | கிறிஸ்துவின் திருவுடல், திருஇரத்த பெருவிழா<br>கிறிஸ்துவின் திருவுடல், திருஇரத்த பெருவிழா தொடர்ந்து ஆராதனை<br>அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம், ஜெலாப்பாங் |

## பங்கு நடவடிக்கைகள்

| **ஜூன் 12 ~17** | **மாலை 7.30** | **புலூமாதே** | **அதிச வாரம்** |
|---|---|---|---|
| ஜூன் 11 ஞா | காலை 8.30<br>காலை 10.30<br>மதியம் 12.00<br>மதியம் 12.15<br>மாலை 7.30 | பெர். மையம்<br>பெர். மையம்<br>ஆலயம்<br>பெர். மை 2-3<br>தாசேக் | மறைக்கல்வி (த)<br>மறைக்கல்வி (ஆ)<br>புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு பயிற்சி (த)<br>மறைக்கல்வி ஆசிரியர்கள் கூட்டம்<br>புனித பிரான்சிஸ் அசிசி சிற்றாலய செயற்குழு கூட்டம் |
| ஜூன் 13 செவ் | காலை 8.30 | பெர். மை 1-3 | பங்கு பரிந்துரை குழு |
| ஜூன் 15 வியா | மாலை 7.00 | ஆலயம் | முன்னோன் வாசகர் பயிற்சி |
| ஜூன் 17 சனி | காலை 10.00<br>மாலை 5.30 | பெர். மை 2-5<br>ஆலயம் | சீடத்துவ நிகழ்வு<br>செபமாலை/ சகாய மாதா நவநாள் |
| ஜூன் 18 ஞா | காலை 8.30<br>காலை 10.30<br>மதியம் 12.00<br>மாலை 7.30 | பெர். மையம்<br>பெர். மையம்<br>ஆலயம்<br>ஜெலாப்பாங் | மறைக்கல்வி (த)<br>மறைக்கல்வி (ஆ)<br>புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு பயிற்சி (த)<br>அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய செயற்குழு கூட்டம் |

**ஜூன் மாத திருமணம் 2017**

ஜூன் 24 காலை 11.00 சடங்கு (த) எவெலினோ செபஸ்டியன் த/பெ அற்புத ராஜூ & யுவனேஸ்வரி த/பெ அர்ஜூனன்

ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம் உடனடியாக தெரிவியுங்கள்.

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

1. **மலேசியா கத்தோலிக்க முகாம் மாணவர்கள் தினம் நிறைவு திருப்பலி நேரலை:** பினாங்கு, பரிசுத்த ஆவி பேராலயத்தில் 27 ஜூன் 2017 (செவ்) காலை 10.30க்கு நேரலை செய்யப்படும். பினாங்கு ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் தலைமையில் நடைபெறும் கொண்டாட்டத்தை இணையத்தில் **http://www.youtube.com/user/liveonlinepenang** வழி காணலாம்.
2. **புகைப்படங்கள்:** பாஸ்கா திருவிழிப்பின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களை RCIA வேட்பாளர்கள் 18 ஜூன் 2017 (ஞாயிறு) காலை 9.00 மணி திருப்பலிக்கு பிறகு பங்கு மண்டபத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
3. **அடுத்த குழந்தைகள் திருமுழுக்கு (தமிழ்):** 8 ஜூலை 2017 (சனி) @ மாலை 4.30க்கு நடைபெறும். மேல் விபரங்களுக்கு பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**4. கிறிஸ்துவின் திருவுடல் திரு இரத்த பெருவிழா:** 18 ஜூன் 2017 (ஞாயிறு) காலை 9.00 மணி திருப்பலிக்குப் பின்னர் திவ்விய நற்கருணை ஆராதனைக்கு வைக்கப்பட்டிருக்கும். இந்த ஆராதனை மாலை 6.00க்கு தேவநற்கருணை ஆசீருடன் நிறைவுறும்.

**கிறிஸ்துவின் திருவுடல் திரு இரத்த ஆராதனைக்கான அட்டவணை**

| | |
|---|---|
| காலை 10.30 ~ காலை 11.00 | பங்கு மனித வள மேம்பாட்டுக் குழு |
| காலை 11.00 ~ காலை 11.30 | ஆன்மீகக் குழு |
| காலை 11.30 ~ மதியம் 12.00 | திருவழிபாட்டுக் குழு |
| மதியம் 12.00 ~ மதியம் 12.30 | முதியோர் மறைக்கல்வி |
| மதியம் 12.30 ~ மதியம் 1.00 | சிறார் மறைக்கல்வி |
| மதியம் 1.00 ~ மதியம் 1.30 | அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம் |
| மதியம் 1.30 ~ மதியம் 2.00 | புனித செபஸ்தியார் சிற்றாலயம் |
| மதியம் 2.00 ~ மதியம் 2.30 | புனித பிரான்சிஸ் அசிசி சிற்றாலயம் |
| மதியம் 2.30 ~ பிற்பகல் 3.00 | கிறிஸ்து அரசர் சிற்றாலயம் |
| பிற்பகல் 3.00 ~ பிற்பகல் 3.30 | மேற்கு திசை |
| பிற்பகல் 3.30 ~ பிற்பகல் 4.00 | தெற்கு திசை |
| பிற்பகல் 4.00 ~ பிற்பகல் 4.30 | மத்திய திசை |
| பிற்பகல் 4.30 ~ மாலை 5.00 | கிழக்கு திசை |
| மாலை 5.00 ~ மாலை 5.30 | வடக்கு திசை |
| மாலை 5.30 ~ மாலை 6.00 | நற்கருணை பணியாளர்கள் குழு |
| **மாலை 6.00** | **தேவநற்கருணை ஆசீர்வாதம்** |

**5. அன்னை மரியாளோடு நடப்போம்:** இந்நிகழ்வு எல்லா கல்லூரி மாணவர்களுக்கும், பங்கு மக்களுக்கும் தயாரிக்கப்பட்டது; இந்நிகழ்வில் அன்னை மரியாள் மாணவர்களுடன் பயணிப்பதின் அடையாளமாக பாத்திமா அன்னையின் திருவுருவச்சிலை இப்பங்கிற்கு கொண்டுவரப்படும். நாள்: 11 ஜூன் (ஞாயிறு) ~ 17 ஜூன் (சனி) 2017 நேரம்: மாலை 8.00 ~ 9.30 இடம்: புனித லூர்து அன்னை தேவாலயம், ஈப்போ தொடர்புக்கு: பிமஇக (PDYN) அலுவலகம்- (04-2274851)

**6. MCCSD 2 - மாணவர்களின் இரக்க செயல்கள்:** வரவிருக்கின்ற பினாங்கு MCCSD நிகழ்வின் போது உடல் சார்ந்த இரக்க செயல்களை செயல்படுத்த 878 இளைய மாணவர்களுக்கு தேவைப்படும் உணவுப்பொருட்களின் பட்டியல் எங்களிடம் இருக்கின்றது. இந்த உணவுப் பொருட்கள் வீதியோரங்களில் உள்ள ஏழைகள் சமைப்பதற்கும், ஏழைக் குடும்பங்களுக்கு உணவளிக்கவும், சிறப்பு தேவைகளுடைய குழந்தைகளுக்கு உணவளிக்கவும், சாலையோரங்களில் கைவிடப்பட்ட குழந்தைகள் போன்றவர்களுக்கு பயன்படுத்தப்படும். இது சமூக கட்டுப்பாடுகளை தளர்த்த இளையோர் மேற்கொள்ளும் ஒரு முயற்சியுமாகும். 18 ஜூன் 2017க்குள் உங்களின் தாராள பங்களிப்பை நாங்கள் பெரிதும் எதிர்பார்க்கிறோம். பட்டியலிடப்பட்ட பொருள்களில் ஏதேனும் ஒன்றை வழங்க உங்களுக்கு தூண்டுதல் ஏற்பட்டால் தயவு செய்து பங்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**7. 2017 / 2018 முதியோர் திருமுழுக்கு - புதிய வகுப்பு (யோவான் 1:39) "வந்து பாருங்கள்" :** புதிய வகுப்புக்கு தங்கள் பெயர்களை பதிவு செய்து கொண்டவர்கள் ஒரு விளக்கக் கூட்டத்திற்கு வரக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். **நாள்**: 22 ஜூன் 2017 (வியா) **நேரம்**: மாலை 7.30 **இடம்**: பெர். மையம் 2-2 (2ஆம் மாடி) யாருக்கு முதியோர் திருமுழுக்கு? திருமுழுக்கு பெறாத பெரியவர்கள், மற்ற கத்தோலிக்க அல்லாத கிறிஸ்துவ பாரம்பரியத்தில் திருமுழுக்கு பெற்ற பெரியவர்கள். புது நன்மை, உறுதிபூசுதல் அருள்சாதனங்களைப் பெறாத கத்தோலிக்க பெரியவர்கள். மேல் விபரங்களுக்கு பங்கு குருவானவர்கள்: தந். ரோபர்ட் டேனியல்/ தந். சைமன் ஆனந்த் (பங்கு அலுவலகம் 05-5279349)/ திரு.ஜேரோம் சாமுவேல்: 05-5268329/ 012-6786911

**8. அடக்க ஏற்பாடு:** அடுத்த 5 வருடங்களுக்கு தம்பூனில் உள்ள கத்தோலிக்க கல்லறையை புனித சகாய மாதா தேவாலயம் நிர்வாகம் செய்யும். நமது பங்கில் ஏதேனும் மரணம் ஏற்பட்டால் உடனடியாக திருப்பலிக்கான ஏற்பாட்டிற்கு புலூமா பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும். அதன் பிறகு அடக்கத்திற்கான ஏற்பாட்டிற்கு நீங்கள் உடனடியாக புனித சகாய மாதா தேவாலயத்தை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். மற்ற நேரங்களில் தோமஸ் ஜீ (012-5182818) தொடர்பு கொள்ளவும்.

**9. சிற்றாலய கட்டுமான திட்டங்கள்:** ஒவ்வொரு சிற்றாலயம் கட்டுவதற்கு (கிஅ/ அவே) உச்ச வரம்பாக ரிம 1.2 மில்லியன் என ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டு விட்டது. அந்த திட்டம் அதனை விட மலிவாகவும் இருக்கக் கூடும். எவ்வாறாயினும், எந்த திட்டமும் 80% பணம் வங்கியில் இல்லாமல் தொடங்கப்பட முடியாது. இந்த வகையில் நமது ஒவ்வொரு சிற்றாலயம் கட்டும் பணியை தொடங்க நம்மிடம் குறைந்தது ரிம 960,000.00 இருக்க வேண்டும். இது பினாங்கு மறைமாவட்ட கொள்கை. "நீங்கள் திட்டத்தை தொடங்குங்கள், நாங்கள் பிறகு தருகிறோம்" என்ற பேச்சு தேவையில்லை. நம்மிடம் பணம் இருந்தால் நாம் கட்டுவோம், இல்லையேல் நம்மிடம் பணம் வந்து சேரும் வரை காத்திருப்போம்!!!

**10. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதி மே 2017 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **322,189.03** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **333,341.43** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும், வாரந்தோறும் அல்ல)

**04/06/17 திருப்பலி வசூல்கள்:** **காலை** 7.00 - RM 1,240.35 **காலை** 9.00 - RM 1,559.45 **மொத்தம்**– RM 2,799.80

**2016** - RM 20.00 **2017** - RM 210.00 **மொத்தம்**– RM 230.00 **ஏழைகளுக்கு**– RM 2,537.35

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம், ஈப்போ என்று ஆங்கிலத்தில் எழுதவும்